# R 5336 (page 318)

# மூப்பர்களையும் உதவிக்காரர்களையும் தேர்ந்தெடுத்தல்

## CHOOSING ELDERS AND DEACONS

சபைகளுக்கான ஊழியக்காரர்களாகிய மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களின் தேர்வு குறித்து ஆறாம் தொகுதியில் கொடுக்கப்பட்டுள்ள யோசனைகளை பயன்படுத்துவதில் உள்ள சிரமங்களை குறித்த அநேக கேள்விகள் சகோதரரிடமிருந்து நமக்கு வந்திருக்கின்றன.

இந்த காரியத்தைக் குறித்த ஒரு நிலையான சட்டத்தை வைக்க வேண்டும் என்பது எங்கள் எண்ணமல்ல. வேதாகமம் அப்படிப்பட்ட கட்டளை எதையும் கொடுக்கவில்லை. அப்படிப்பட்ட ஒரு சட்டத்தை வைக்க யாருக்கும் உரிமையில்லை. கூடுமானால் இந்த தேர்ந்தெடுத்தலானது ஏகமனதாக இருக்க வேண்டும் என்பதும், ஒரு சகோதரனுக்கு 75ரூ அல்லது அதற்கும் அதிகமான பேர் ஆதரவு கொடுக்காத பட்சத்தில் அந்த சகோதரன் அந்த பதவியை ஏற்றுக்கொள்ளுவது ஞானமானதாக இருக்காது என்பதும் எங்களது கருத்தாக இருந்தது. இதனிமித்தம் சிறுபான்மையினரான 25 அல்லது 30ரூ சபையை தடங்கல் செய்யவும் தேர்ந்தெடுத்தலை தடை பண்ணவும் தைரியமூட்டப்பட வேண்டும் என்பது அதன் பொருளாகாது.

சரியாக சொல்ல வேண்டுமென்றால், அன்பானது மற்றவர்களின் உணர்வுகளையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்கிற தருணங்களைத் தவிர, அதிகப்படியான ஒரு வாக்கே பெரும்பான்மையை நிரூபிக்க போதுமானதாக இருக்கிறது. உதாரணத்திற்கு நூறு பேர் கொண்ட சபையில், 51 பேர் சபையின் ஊழியக்காரனை தேர்ந்தெடுக்க போதுமானவர்களாக இருக்கிறார்கள். மற்ற 49 பேர் அவர்கள் சிறுபான்மையாக இருப்பதால், பெரும்பான்மையானவர்களின் விருப்பத்தை ஆதரிக்க முயற்சி செய்ய வேண்டும்.

அன்பின் ஆவியும் சபையைப் பற்றியும் அனைவரின் அக்கறையும் 51ரூ யோசனை கூறுகிறது. அன்பானது ஒரு மனதாக தேர்வுக்கு முயற்சி செய்ய வேண்டும். ஆனால் இதை எப்படி பெற வேண்டும்? நாங்கள் ஒரு யோசனையை வைக்கிறோம்.

**A,B,C,D,E,F** என்ற ஆறு பேர் தகுதியுள்ளவர்களாக இருந்தால், **A** நூறு ஓட்டும், **B** 90 ஓட்டும், 80 ஓட்டும், 70 ஓட்டும், 60 ஓட்டும், 50 ஓட்டும் பெற்றால் 90 ஓட்டிற்கு மேல் பெற்ற இரண்டு பேர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். எங்களது யோசனை என்னவென்றால் அவர்கள் திறமைசாலிகளாகவும் நல்ல குணலட்சணமுடையவர்களாகவும் இருந்தால் இழிவான குணம் இல்லாதிருந்தால் ஆறு பேருமே ஒரு மனதாக தேர்ந்தெடுக்கப்படலாம்.

பரிசுத்த பவுல் சொன்ன தகுதிகளை நாம் சொல்லர்த்தமாக எடுத்துக்கொண்டால் எல்லா தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடியவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். அப்போஸ்தலர் சீர்மிகு மூப்பர் எப்படி இருக்க வேண்டும் என்று கூறுகிறார். கர்த்தருடைய சித்தத்தை சிந்திப்பதில் ஓட்டளிப்பவர் இந்த சீர்மையை மனதில் கொள்ள வேண்டும். தீவிரமான குற்றம் சாட்டப்பட்டவர் இருந்தால் ஒழிய சபையானது ஒரு மூப்பர் இல்லாமல் விடப்படக்கூடாது.

அதே போல் நமது கர்த்தர் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராக இருக்கிறது போல, நீங்களும் பூரண சற்குணராக இருக்கக்கடவீர்கள் என்று கூறி நமக்கு

முன் ஒரு பூரண திட்ட அளவை வைக்கிறார். (மத்தேயு 5:48) தேவன் பூரணராயிருக்கிறது போல யார் பூரணராயிருக்கிறார்? "நீதிமான் இல்லை, ஒருவனாகிலும் இல்லை." (ரோமர் 3:10) நாம் நம்மை குறைவான திட்ட அளவுடன் ஒப்பிட்டு அளவிடாமல், பூரண அளவுடன் ஒப்பிட்டு மதிப்பிட வேண்டும் என்ற பொருளில் ஆண்டவர் கூறியுள்ளார். இதன் மூலம் நமது சொந்த ஜீவியங்கள் மற்றும் குணலட்சணங்களிலும் இன்னும் மூப்பர்களாகவும் மந்தைக்கு மாதிரிகளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் விஷயங்களிலும் நமக்கே உதவி புரிகிறவர்களாக இருப்போம்.

முழு அர்ப்பணம் செய்து அதை தண்ணீர் முழுக்கு என்ற அடையாளத்தினால் வெளிப்படுத்தினவர்கள் தவிர வேறு யாரும் ஓட்டளிக்கக்கூடாது என்பதை எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும். இப்படி தங்களது அர்ப்பணத்தை அடையாளப்படுத்தி; காண்பிக்காதவர்கள் சகோதரர்கள் அல்ல என்று மறுக்கப்படக்கூடாது. மாறாக அவர்கள் இன்னும் வளர்ச்சியடையவில்லை என்றும், சபையில் ஊழியம் செய்ய தகுதியுள்ளவர்கள் யார் என்பதை வெளிப்படுத்தவும், தாங்களே சபைக்கு ஊழியம் செய்யவும் தகுதியற்றவர்கள் என்றும் கருதப்பட வேண்டும்.

இங்கும் அங்குமாக எழும்பி ஊடுருவும் இன்னொரு கேள்வி என்னவென்றால், எல்லாருக்கும் பரிந்துரைக்கப்பட்டதும் நம்மில் அநேகருக்கு மிகவும் பிரயோஜனமானது என்றும் காணப்படுகிற விசேஷித்த வாக்குறுதியை சகோதரத்துவத்துக்கான பரீட்சையாக நாம் ஆக்கமுடியாது. வேதமும் அதை சகோதரத்துவத்துக்கான பரீட்சையாக்க நமக்கு அதிகாரமளிக்கவில்லை. இது தெய்வீக கட்டளையாக இல்லாமல் தீர்மானிக்கக்கூடிய காரியமாக இருக்கிறது. மூப்பருக்கான தகுதியாக இது வேதாகமத்தில் குறிப்பிடப்படவில்லை. இது ஆங்கில மொழியை தவறாக பயன்படுத்துவது போலவும், அருவருப்பான முறையில் கவனிக்கப்படுவது போலவும் இருக்கக்கூடாது.

எங்குமுள்ள கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் உள்ள பிரியமுள்ள மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் அனைவரும், வாக்குறுதி நியாயமானது என்றும் அது தெய்வீக வார்த்தைகளுடனும் நமது அர்ப்பணிப்பின்போது வாக்குறுதியுடனும், இசைவாக இருப்பதையும் அது இளநீல தொங்கலாக இருக்கிறது என்பதையும் காண்பார்களானால் அதினிமித்தம் நாம் மிகவும் களிகூருகிறோம். அந்த வாக்குறுதிக்கு ஒரு கிறிஸ்தவ சகோதரன் அல்லது சகோதரி மறுப்பு தெரிவிக்கக்கூடும் என்று யோசிக்காமல் இருக்கக்கூடாது. இது நம்மில் சிலருக்கு அவர்களது இருதயத்தின் நோக்கங்களில் ஏதேனும் குறைபாடு காணக்கூடும் அல்லது புரிந்து கொள்ளுதலில் ஏதாவது தவறு இருக்கக்கூடும் என்று காணப்படுகிறது. எனினும் நாம் சரியானபடி நியாயந்தீர்க்க திறமையுள்ளவர்கள் அல்ல. மற்றவர்களை குற்றவாளிகள் என்று தீர்க்காதிருங்கள் என்று ஆண்டவர் சொன்னார்.

வாக்குறுதியை எடுத்தவர்களுக்கும், அது குறித்த ஒருமித்த கருத்துடையவர்களுக்கும் மூப்பர்கள் அல்லது உதவிக்காரர்கள் என்ற பதவிகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படலாம் என்பது எங்களது கருத்தாக இருக்கிறது. சபையை நடத்துவதற்கு திறமை மிக்க சகோதரர்களும் வாக்குறுதியை எதிர்க்காதவர்களாகவும்

**R5337 : page 319**

இருப்பார்களானால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படலாம். இப்படியாக தங்களால் முடிந்தவரை வாக்குறுதிகளின் தேவைகளின்படி தாங்கள் வாழ்வதாகவும், இந்த வாக்குறுதியை எடுத்தால் தங்களுக்கோ மற்றவர்களுக்கோ தீமை விளைவிக்கும் என்று எண்ணி அதை எடுக்காமல் இருப்பவர்களுக்கு அது உண்மையாக இருக்கலாம். அவர்களது மனப்பாங்கையோ, அவர்களது நியாயப்படுத்தும் முறைகளையோ புரிந்து கொள்ளாமலிருந்தால், நம்மால் புரிந்துகொள்ள முடியாததையும் உணர்ந்து கொள்ள முடியாததையும் நாம் கடந்து போகலாம்.

---